Name of the Newspaper ....... DINA MALAR ....... Date: 25-2-18

# 3 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் 2ம் திட்டம்

## ரூ.85 ஆயிரம் கோடியில் 108 கி.மீ.,க்கு அமைகிறது

– நமது நிருபர் –

மூன்று வழித்தடங்களில் அமைய உள்ள, மெட்ரோ ரயில் இரண்டாவது திட்டத்தில், பாதை கட்டுமானத்திற்கான, ஆயத்த பணிகளை, மெட்ரோ ரயில் நிர்வாகம் துவங்கியுள்ளது. இதற்காக, முழு ஆய்வறிக்கை தயாரிக்கும் பணிக்கு, உலகளாவிய டெண்டர், கோரப்பட்டு உள்ளது.

சென்னை மெட்ரோ ரயில், முதல் திட்டத்தில், 45.1 கி.மீ., துாரத்திற்கு, ரயில் பாதை கட்டுமான பணி நடந்து வருகிறது.

**எதிர்பார்ப்பு**

இத்திட்டத்தில், சென்னை விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, நேரு பூங்கா வரையும், விமான நிலையத்தில் இருந்து, சின்ன மலை வரையும் ரயில் போக்குவரத்து நடந்து வருகிறது.



நேரு பூங்கா – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நடந்து வருகிறது. சின்னமலை – தேனாம்பேட்டை டி.எம்.எஸ்., வரை, சோதனை ஓட்டம், விரைவில் துவங்கப்பட உள்ளது.

இப்பாதைகளில், மார்ச்சில் இருந்து, மெட்ரோ ரயில் இயக்கப்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

தேனாம்பேட்டை டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, மெட்ரோ ரயில் பாதை பணிகள், 70 சதவீதம் முடிந்துள்ளது.

முழு பணியும் முடிந்து, வரும் டிசம்பரில், விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை இடையே, ரயில் போக்குவரத்து துவங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மெட்ரோ ரயில் நீட்டிப்பு திட்டத்தில், வண்ணாரப்பேட்டையில் இருந்து, திருவொற்றியூர் விம்கோ நகர் வரை, 9.2 கி.மீ., துாரத்திற்கு, ரயில் பாதை அமைக்கும் பணி நடந்து வருகிறது.

இப்பணி முடிந்து, 2019 டிசம்பரில், விம்கோ நகர் வரை, ரயில் போக்குவரத்து துவங்க, திட்டமிடப்பட்டுள்ளது.

மெட்ரோ ரயில் முதல் திட்ட பணிகள், முடியும் தருவாயில் உள்ளதால், இரண்டாம் திட்ட பணிகளை, 2019ல் துவங்க, அரசு திட்டமிட்டு உள்ளது.

அதற்கான, பூர்வாங்க பணிகளை, தற்போது முழுவீச்சில் துவங்கி உள்ளது.

**இரண்டாவது திட்டம்**

மெட்ரோ ரயில், இரண்டாவது திட்டம், 85 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், மாதவரம் – சிறுசேரி சிப்காட், மாதவரம் – சோழிங்கநல்லுார், கோயம்பேடு – கலங்கரை விளக்கம் இடையே, 107.55 கி.மீ., துாரத்திற்கு செயல்படுத்த, தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது திட்டத்தில், 104 நிலையங்கள் கட்டப்பட உள்ளன. மத்திய, மாநில அரசு, மற்றும் ஜப்பான் நாட்டு பன்னாட்டு கூட்டுறவு முகமையின் கடன் வசதியுடன், இரண்டாவது திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

இந்த மூன்று வழித்தடங்களிலும், நிலையங்கள், ரயில் பாதை அமைக்க தேவையான நிலம் குறித்து, தனியார் ஒப்பந்த நிறுவனம், மூன்று மாதங்களாக, ஆய்வு பணிகளை, தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

இதன் அடுத்தகட்டமாக, இரண்டாவது திட்டத்திற்கான, கட்டுமான பணிகள் குறித்து, முழு ஆய்வு நடத்த, மெட்ரோ ரயில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இதற்கு, தகுதியான தனியார் நிறுவனத்தை நியமித்து, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க வசதியாக, டெண்டர் கோரப்பட்டு உள்ளது.

### கட்டமைப்பு எப்படி?

- மாதவரம் – சிறுசேரி சிப்காட் இடையே, 45.81 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட உள்ளது. இப்பாதை, தரைக்கு மேல், 19.09 கி.மீ.,யும், சுரங்கத்தில், 26.72 கி.மீ.,யும் அமையும். இப்பாதையில், தரைக்கு மேல், 20 நிலையங்களும், சுரங்கத்தில், 30 நிலையங்களும் என, 50 நிலையங்கள் அமைகின்றன.
- கோயம்பேடு – கலங்கரை விளக்கம் இடையே, 17.12 கி.மீ., பாதை முழுவதும், சுரங்கத்தில் அமைகிறது. சுரங்கத்தில், 20 நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன
- மாதவரம் – சிறுசேரி சிப்காட் இடையே, 44.62 கி.மீ., பாதை அமைக்கப்பட உள்ளது. இப்பாதை, தரைக்கு மேல், 7.49 கி.மீ.,யும், சுரங்கத்தில், 37.13 கி.மீ.,யும் அமையும். இப்பாதையில், தரைக்கு மேல், 8 நிலையங்களும், சுரங்கத்தில், 38 நிலையங்களும் கட்டப்பட உள்ளன.